2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 153, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.N. விஜயகுமார், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

153—

உயர்மட்டப் பாலம்

***58010—திரு. K.N. விஜயகுமார்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் (வடக்கு) தொகுதி, மாநகராட்சிப் பகுதியில் உள்ள அனுப்பர்பாளையத்தில் இருந்து மின் மயானம் வழியாகச் செல்லும் தரைமட்டப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் அவர்கள் தரைமட்டப் பாலம் உயர்மட்டப் பாலமாக உயர்த்தப்படுமா என்ற ஒரு வினாவை எழுப்பியிருக்கிறார்கள். பாலத்திலே, நான்கு வகைகள் உண்டு. ஒன்று, தரைமட்டப் பாலம், இன்னொன்று உயர்மட்டப் பாலம், இன்னொன்று மூழ்கு பாலம், இன்னொன்று சாலை மேல்மட்டப் பாலம் என்று நான்கு வகை பாலங்கள் உண்டு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கேட்டிருப்பது மூழ்கு பாலம். வெள்ளச் சமயங்களிலே மட்டும் மூழ்குமாறு அமையப்பெற்ற மூழ்கு பாலம் ஆகும். இந்தப் பாலம் கட்டி கிட்டத்தட்ட 50 ஆண்டுகள் ஆகின்றன. இந்த மூழ்கு பாலத்தை உயர்மட்டப் பாலமாக்க வேண்டுமென்று சொன்னால் அரசின் சார்பாக ரூ.50 கோடி செலவு செய்யப்பட வேண்டும். கடந்த 10 ஆண்டு காலத்திலே அந்தப் பாலம், எந்த வருடத்திலும் மூழ்கவில்லை. அந்த அளவிற்கு வெள்ளமே அங்கு வரவில்லை. ஆனாலும், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, நிதிநிலை அடிப்படையிலே வருங்காலங்களிலே உயர்மட்டப் பாலமாக அமைக்க முடியுமா என்பது குறித்து அரசு பரிசீலிக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. K.N. விஜயகுமார் அவர்கள்.*

[2023 ஏப்ரல் 13

திரு. K.N. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் வடக்கு தொகுதிக்குட்பட்ட மாநகராட்சிப் பகுதியில் உள்ள அனுப்பர்பாளையத்திலேயிருந்து மின் மயானம் செல்லும் வழியிலே நல்லாற்றின் குறுக்கே தரை மட்டப் பாலமானது கட்டப்பட்டு, கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டது. அந்தப் பாலம் மோசமான நிலையில் உள்ளதாலும், அந்தப் பகுதியிலே போக்குவரத்து அதிகமாக உள்ள காரணத்தினாலும், அந்த தரைமட்டப் பாலத்தை, உயர்மட்டப் பாலமாக, இந்த ஆண்டே அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–10

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் நான் சொன்னதைப் புரிந்துகொள்ளவில்லை என்று கருதுகிறேன். அது முதலில் தரைமட்டப் பாலமே அல்ல. அது மூழ்குபாலம். ஏற்கெனவே, கண்ணாறு எல்லாம் இருக்கிறது. தரைமட்டப் பாலம் என்று சொன்னால், தரை அளவிலே போகிற பாலம் தான் தரைமட்டப் பாலம். மூழ்கு பாலத்தில், குறிப்பிட்ட காலங்களில் தண்ணீர் போய்க்கொண்டேயிருக்கும். அந்தப் பாலம் எவ்வாறு அமைக்கப்படுகிறது என்று சொன்னால், பெருவெள்ளம் வருகிறபோது, தண்ணீர் தடையில்லாமல் செல்லும் வகையில் அந்த மூழ்கு பாலத்தின் அமைப்பு இருக்கும்.

(மூழ்கு பாலத்தின் அமைப்பை விளக்கும் புகைப்படத்தை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அவையில் காண்பித்தார்கள்.)

அப்படி ஒரு வகையான பாலம் உண்டு. 10 ஆண்டுக் காலமாக, அந்தப் பகுதியில் வெள்ளமே வராத ஒரு நிலை இருக்கும்போது, அங்கே உயர்மட்டப் பாலம் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இருப்பினும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இந்த ஆண்டு நிதி நிலைமை சரியாக இருக்கும்பட்சத்தில், அதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று நான் ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறேன்.

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. K.N. விஜயகுமார் அவர்கள்.*

திரு. K.N. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் வடக்கு தொகுதியில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளது. அங்குள்ள P.N. சாலையில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளதால், அப்பகுதியில் வேலைக்குச் செல்லும் இலட்சக்கணக்கான தொழிலாளர்களும், பள்ளி, கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவ, மாணவிகளும் குறித்த நேரத்தில் செல்ல முடியாத காரணத்தினால், புஷ்பா தியேட்டர் முதல் பாண்டியன் நகர் வரை உயர்மட்டப் பாலம் அமைத்துத் தர வேண்டுமென 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின்கீழ், தொகுதியிலுள்ள முக்கியமான 10 கோரிக்கைகளில் ஒரு கோரிக்கையாகக் கொடுத்துள்ளேன். ஆகவே, அரசு, அந்தப் பாலத்தை, இந்த ஆண்டே அமைத்துத் தர ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரிலிருந்து, புஷ்பா திரையரங்கம் முதல் பாண்டியன் நகர் வரை உயர்மட்டப் பாலம் அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்தைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். இதற்கிடையில் திருப்பூர் நகருக்குப் புறவழிச் சாலை அமைப்பதற்காக, தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலமாக DPR தயார் செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே, அந்தப் பணி முழுமையடைந்த பிறகு, புறவழிச் சாலை அமைக்கப்படும் என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற சாலையில், போக்குவரத்து நெரிசல் குறைவாகத்தான் இருக்கும். இந்தப் புறவழிச் சாலை அமைந்த பின்பு, அச்சாலையில் போக்குவரத்து தொடங்கிய பிறகு, மீண்டும் அந்தப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு அரசு முயற்சி செய்யும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 154, மாண்புமிகு உறுப்பினர் திரு. G.V. மார்க்கண்டேயன், மாண்புமிகு*

மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

154—

குடியிருப்புகள்

***3173—திரு. G.V. மார்க்கண்டேயன்:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழவைப்பார் ஊராட்சியில் மீனவர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

தூத்துக்குடி மாவட்டம், கீழவைப்பார் ஊராட்சிக்குட்பட்ட கீழவைப்பார் மற்றும் சிப்பிக்குளம் ஆகிய மீனவர் கிராமங்களில் மீனவர் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. G.V. மார்க்கண்டேயன் அவர்கள்.*

திரு. G.V. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலோடி மக்களின் கலங்கரை விளக்கமாக விளங்குகிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி, விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், கீழவைப்பார் ஊராட்சியில் ஏறக்குறைய 6,000 மக்கள் வசிக்கின்றார்கள். அந்த ஊராட்சியில் அகமதுபுரம், ஸ்ரீவைகுண்ட பெருமாள்புரம், கீழவைப்பார், சிப்பிக்குளம் ஆகிய நான்கு மீனவ குக்கிராமங்கள் இருக்கின்றன. அந்த மீனவக் கிராமங்களில், 100–க்கும் மேற்பட்ட மக்கள் வீடுகள் இல்லாத நிலையில் இருக்கிறார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய முந்தைய ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட ஏறக்குறைய 62 வீடுகள் ஓட்டு வீடுகளாக இருக்கின்றன. அந்த வீடுகள் தற்போது பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அந்தப் பகுதி மக்கள்*